# <u>இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியத்தின் ஆயிரம் மாணவர்களை நோக்கிய திட்டத்தின் மதிப்பீட்டு பயண விபரம்.</u>

பயணம் செய்தோர்:1) திரு.த.தயாபரன் (செயலாளர் UAETS FRANCE )

2)திரு.உ.பரராயசேகரன் (தாயாக இணைப்பாளர் UAETS FRANCE )

எமது ஒன்றியத்தின் முதலாவது செயற்திட்டத்தின் நிலமைகளை அவதானிப்பதற்காக தாயகம் சென்று , எமது திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களை நேரில் சந்தித்தது அவர்களின் நிலைமைகளை அவதானிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவில் தலைவர் திரு.செ.பாஸ்கரன் அவர்களும் , பொருளாளர் திரு.த.தில்லைநாதன் அவர்களும் , உப செயலாளர் திரு.சி.மனோகரன் அவர்களும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இறுதிநேரத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. இருந்த போதும் நாம் திட்டமிட்டபடி எமது நடவெடிக்கையினை சரியாக செய்து முடித்துள்ளோம். தான் சமூகம் தர முடியாமல் போனநிலையிலும் செயலாளருக்கான விமானப்பயண சீட்டினை தலைவர் திரு.செ.பாஸ்கரன் அவர்கள் ஒழுங்குசெய்து கொடுத்து இந்த நடவெடிக்கையினை தொடங்கிவைத்தது இங்கே குறிப்பிடப்பட வேண்டியது அவசியம்.எமது பயணம் 10/02/2017 காலை 7.30 மணிக்கு சாவகச்சேரியில் இருந்து ஆரம்பமானது. கேரதீவு சங்குப்பிட்டி பாலத்தை கடந்து சரியாக 8.00 மணியளவில் எமது கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திரு.உதயச்சந்திரன் அவர்களை பூநகரியில் சந்தித்து ,அவரையும் அழைத்துக்கொண்டு சரியாக 8.30 மணிக்கு முழங்காவில் மகா வித்தியாலயத்தில் எமது முதலாவது மாணவர்களின் தொகுதியை சந்தித்தோம்.





முழங்காவில்







புதுக்குடியிருப்பு

மிகவும் மகிழ்வோடு எம்மை வரவேற்றார்கள்.நாம் ஏற்கனவே திட்டமிட்டு இருந்ததன்படி அனைத்து விபரங்களையும் குறித்துக்கொண்டோம். (விபரங்கள் பின்னால் இணைக்கப்பட்டு உள்ளது).

அங்கிருந்து புறப்பட்டு கிளிநொச்சிக்கு சரியாக 1.30 மணியளவில் வந்து சேர்ந்தோம். அங்கே உதயநகர் என்னும் இடத்தில் ஒரு இல்லத்தில் எமது இரண்டாவது தொகுதி மாணவர்களை சந்தித்தோம்.பின்னர் அங்கிருந்து புதுக்குடியிருப்புக்கு மாலை 4.00 மணியளவில் சென்றடைந்தோம். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் எமது மூன்றாவது மாணவர் தொகுதியையும் பின்னர் 6.00 மணியளவில் வள்ளிபுனம் என்னும் இடத்தில் எமது நான்காவது மாணவர் தொகுதியினையும் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திரு.ஜே.ஜெனமன் அவர்களுடன் சந்தித்தோம் . குறித்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள எமது அனைத்து மாணவர்களது நிலையினையும் அவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் , அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் ஓரளவு உணரக்கூடியதாக இருந்தது. இருந்தும் முழுமையாக அவர்களின் பிரச்சனைகளிற்கான தீர்வுகளை எம்மால் வழங்க முடியுமா என்ற ஏக்கத்தோடு எமது பயணம் தொடர்ந்தது. மாலை 8.00 மணியளவில் எமது முல்லைத்தீவு மாவட்டத்தின் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு திருகோணமலை மாவட்டத்திற்கனா பயணத்தை தொடர முடிவு செய்தோம். 11/02/2017 காலை 9.00 மணிக்கு பன்குளத்தில் எமது சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. எனவே நேரடியாகவே முல்லைத்தீவில் இருந்து மணலாறு , புல்மோட்டை ஊடாக திருமலை செல்வது என்று முடிவுசெய்து புறப்பட்டோம். நாயாத்துப்பாலத்தை கடந்து செல்கையில் நேரம் இரவு 10.00 மணி, வெறிச்சோடிக்கிடந்த காட்டுப்பாதை. ஏதோ ஒரு துணிவு. சாரதியாக வந்த திரு .தினேஷ் பாதைகள் அனைத்தையும் அறிந்திருந்தது எமக்கு ஒரு தெம்பை கொடுத்தது. மணலாற்றுக்காட்டின் மையத்தினியூடாக கடந்து செல்கையில் பேபி அண்ணன் தனது பழைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.எமது தேசத்தின்பால் கொண்ட பாசத்தினால் அவர் எத்தனை துன்பங்களை சுமந்து இருக்கிறார் என்பதை உணரக்கூடியதாக இருந்தது அந்த பயணம்.அதுவரை எமக்கு தெரியாத பல எமது தாயாக விடயங்களை அன்று தெரிந்து கொண்டோம்.இந்த தேசத்திற்காக எத்தனையோ தியாகங்களை புரிந்த அந்த காட்டுப்பகுதியை , அதில் வாழ்ந்த மனிதர்களை நினைத்துக்கொண்டு எமது பயணம் தொடர்ந்தது. நேரம் 1.00 மணியை நெருங்கி கொண்டு இருந்தது நாங்கள் திரியாய்யை நெருங்கி கொண்டிருந்தோம் வாகனம் ஒரு வளைவில் திரும்பியது வீதியின் வலதுபுறம் ஒரு பெரிய யானைக்கூட்டம் ,ஒரு கணம் திகைத்தது போய்விட்டோம். யானைகள் அமைதியை நின்றதை பார்த்தபின் ஒரு படம் எடுப்போமா என்று வேறு ஒரு யோசனை, எம்முடன் வந்த சாரதி சொன்னார் காமரா வவெளிச்சத்திற்கு யானைகள் வெருண்டால் வான் கூட தப்பாது என்ற அவரது அறிவுறுத்தலை ஏற்றுக்கொண்டு 2.00 மணியளவில் திருகோணமலையின் முத்தவெளிக்கு அருகில் ஒழுங்கு செய்திருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.

யானைகளிடம் இருந்து தப்பிவந்த எங்களை திருகோணமலையின் நுளம்புகள் ஒரு பிடிபிடித்து விட்டன. அந்த நுளம்புகளிற்கும் பேபி அண்ணையின் மீதுதான் சரியான பாசம் போலும் நன்றாக கவனித்து விட்டன. 11/02/2017 சரியாக காலை 8.00 மணியளவில் அனுராதபுரம் சந்தியில் எமது திருகோணமலை இணைப்பாளர் திரு.கோமகனையும், புதிய இணைப்பாளர் திரு.ஜெயகுமாரையும் அழைத்துக்கொண்டு பன்குளம் புறப்பட்டோம். போகும்வழியில் எமது மூன்று மாணவர்களையும் ஏற்றிக்கொண்டோம் , அடர்ந்து பரந்தகாடு , குறுக்கே யானை வேலிகள் , ஆங்காங்கே வீடுகள் . பன்குளம் தோற்றமே எமது மனங்களை பாதித்தது.எமது பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான பன்குளத்தின் இன்றைய நிலை எமது மக்களின் இன்றைய வாழ்வுநிலைக்கு சரியான உதாரணமாக உணரப்பட்டது.பிரதான வீதியில் இருந்து பாடசாலைக்கு திரும்பிய போது இருந்த வீதி எமது மாணவர்கள் எப்படி பயணிக்கிறார்கள் என்கின்ற ஏக்கத்தை ஏற்படுத்தியது. நாம் பாடசாலையை அடைந்தபொழுது காலை 9.00 மணி இருக்கும். அந்த கிராமத்தின் எமது மக்களின் மீள் வருகைக்கு நம்பிக்கை கொடுக்கும் ஒரே விடயமாக அந்த பாடசாலை எம்மால் உணரப்பட்டது. எமது திட்டமிடப்பட்ட ஒழுங்கின் படி மாணவர்களின் விபரங்களை சரிபார்த்தபின், அங்கிருந்து புறப்பட்டோம். பிரதான வீதியில் இருந்து குறுக்காக 3 கி.மி. தூரத்தை நடந்தே கடந்து பாடசாலைக்கு செல்கிறார்கள். பாதையும் சீராக இல்லை.இந்த உறவுகள் முள்ளிவாய்க்கால்வரை எமது நிலத்தில் நடந்து சென்று இப்போது தமது சொந்த எல்லைக் கிராமத்துக்கு திரும்பியிருக்கிறார்கள் என்ற தகவல் , எம்மண்ணைவிட்டு புலம்பெயர்ந்து நிற்கின்ற எமக்கு ஒரு பாடத்தை சொல்லித்தந்தது. அடிப்படைவசதிகள் இல்லாத நிலையிலும் சொந்த கிராமத்துக்கு திரும்பியுள்ள உறவுகளிடம் இருந்து , எமது தாய்மண்ணின் பற்றை உலகம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டு , தம்பலகாமம் நோக்கி புறப்பட்டோம்.



பன்குளம்



தம்பலகாமம்










சம்பூர்

12.00 மணியளவில் தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் அடுத்த மாணவர் தொகுதியினரை சந்தித்தோம். அங்கிருந்து நாம் சம்பூரை நோக்கி புறப்பட்ட பொழுது நேரம் 1.30 இருக்கும். வழியில் திரு.கோமகன் அவர்களின் வீட்டில் குளிர்பானம் அருந்திவிட்டு சம்பூரை நோக்கி புறப்பட்டோம். சம்பூர் என்றதுமே தேகம் புல்லரித்தது. ஆம் எமது தாய்நிலத்தின் அடையாள கிராமத்தை நோக்கி செல்கின்றோம் என்கின்ற உணர்வு. பசிவேறு வயிற்றை கொடுமைப்படுத்தியது , வீதியோரத்தில் பனங்கிழங்கும் கச்சானும் அவித்து வைத்துக்கொண்டு இருந்தார்கள் 50 ரூபாவுக்கு 10 கிழங்குகளை அவித்தபடி கொடுத்தார்கள். 1கிலோ கச்சான் வேறு 100 ரூபாய் மட்டும் தான் , அந்த பிரதேசத்தின் பொருளாதார நிலமையை இந்த வியாபாரம் உணர்த்தியது.அவற்றை வாங்கி சாப்பிட்டபடி பயணத்தை தொடர்ந்தோம். மாலை 3.00 மணியளவில் மூதூர் பிரதேச இணைப்பாளரை அவரது வீட்டில் சந்தித்தோம். அவரையும் அழைத்துக்கொண்டு கூனித்தீவு பாடசாலைக்கு சென்றோம். எத்தனையோ இடர்களை தாண்டி தமது நிலத்தை இழந்துவிடாமல் காத்து நிற்கும் அந்த மக்களை பார்த்த பொழுது மனம் பெருமை கொண்டது. அனல் மின்நிலையத்திற்கு அனல் காட்டியபடி அந்த மக்களின் இருப்பு எமக்கு ஒரு நம்பிக்கையினை கொடுத்தது. ஆனால் அவர்களின் வாழ்வுமுறை எமக்கு ஒரு குற்ற உணர்வை தந்தது. கடல் தொழிலையும், விவசாயத்தையும் , கால்நடை வளர்ப்பையும் வளமாக கொண்ட அந்த பிரதேசம் ஏதோ அனைத்தையும் பறிகொடுத்த நிலமாக எமக்கு தெரிந்தது. அந்த மக்கள் அனைவராலும் புறக்கணிக்கப்படுகிறர்கள் என்பது சொல்லாமலே புரிந்து கொள்ள முடிந்தது.காரணம் அவர்கள் அங்கிருந்து செல்லவேண்டும் என்று யாரோ எதிர்பார்க்கிறார்கள் போலும். அப்படியிருந்தும் தமது நிலத்தில் கால்பதித்து தலைநிமிர துடிக்கும் எமது உறவுகளிற்கு மனதார நன்றி சொன்னபடி , மாணவர்களின் நிலைகளை ஆராய்ந்தோம், பின்னர் அங்கிருந்து சம்பூர் மகா வித்தியாலயத்தில் அடுத்த தொகுதி மாணவர்களை சந்தித்து விட்டு மனநிறைவுடன் மட்டக்களைப்புக்கு புறப்பட்டோம்.



நாவலடி வாகரை

அங்கிருந்து நேராக வெருகல் ஆறு கடந்து பாற்சேனை ஊடாக வாகரையை வந்தடைந்த பொழுது நேரம் 6.00 மணியை தொட்டிருந்தது. எமது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திரு.சசிகரன் அவர்களையும் துணை இணைப்பாளர் திரு.முரளி அவர்களையும் அழைத்துக்கொண்டு நாவலடிக்கு சென்றபொழுது நேரம் மாலை 6.15. எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய மாணவர் தொகுதியாக அவர்களை சந்தித்தோம்.வறுமையின் மொத்தவடிவமும் அவர்களில் தெரிந்தது.இருந்தும் கல்வி கற்று என்னசெய்வது என்பதுகூட உணரப்படாமல் ஒரு தேசம் . பத்தாம் வகுப்பு கடக்க முன்னரே கையில் குழந்தையுடன் எமது திட்டத்தில் பயன்பெற்ற ஒரு மாணவி, திட்டத்தில் இணைத்துக் கொள்ளாதவர்கள் பலர். என்ன செய்வது என்றே தெரியவில்லை. இந்த நிலையிலும் ஒரு மாணவன் உயர்தரம் படிக்க தெரிவாகி இருக்கிறான். எந்த பிரச்சனைகளுக்கும் தீர்வுகொடுக்க முடியாத பார்வையாளர்களாக அவர்களை பார்த்துவிட்டு வருவதை தவிர எமக்கு வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.











ஊறணி மட்டக்களப்பு





படுவான்கரை விளாவட்டவான்.

இரவு மட்டக்களப்பில் தங்கிவிட்டு , காலை ஊறணி மகாவித்தியாலயத்தில் எமது அடுத்த தொகுதி மாணவர்களை சந்தித்தோம். மனதில் ஒருவித நிறைவு. நாவலடி அதிர்ச்சியில் இருந்து ஒரு நின்மதி. கற்கவேணும் என்கின்ற மாணவர்களின் ஆர்வம் , பெற்றோர்களின் அக்கறை , நாம் தலைநிமிர்வோம் என்ற உறுதிப்பாட்டை உணர்த்தியது.இணை இணைப்பாளர் திரு .தேவநாயகம் அவர்களையும் அழைத்துக் கொண்டு தொடர்ந்து படுவான்கரைக்கு சென்று விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்தில் எமது அடுத்த தொகுதி மாணவர்களை சந்தித்தோம். வாசல் கடந்து வகுப்பறை போகும்வரை நீர்ச்சகதியாகவே நிலம் இருந்தது. அருகில் உள்ள குளத்தின் கட்டின் ஊடான கசிவின் தாக்கம் என்று சொன்னார்கள், ஒரு பாதுகாப்பு சுவரை நிர்மாணிப்பதாக உரியவர்கள் சொல்லி பலவருடங்கள் கடந்துவிட்டதாகவும் சொன்னார்கள். ஆணை உடைத்தால் அந்த பாடசாலை இருக்குமா என்பதே சந்தேகம் . நாம் உதவி செய்வதற்கு 20 மாணவர்கள் வரை குறையலாம்.அது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். எதற்கும் இருக்கட்டும் என்று நாமும் நின்று ஒரு படம் எடுத்துக்கொண்டோம்.அந்த இடத்தின் நிலமையைப்போலவே அந்த மக்களும். ஒரு மாணவியின் நிலைமையை கேட்ட பேபி அண்ணை உடனடியாக ஒரு சைக்கிளினை வாங்கிக்கொடுக்க ஒழுங்கு செய்தது அனைவரையும் நெகிழச்செய்தது.ஆடை அவிழும் பொழுது அனிச்சைச் செயலக மூளையின் அனுமதிக்கு காத்திராமல் கரம் அதனை பிடிப்பது போல உடனடியாக பேபி அண்ணை செய்த செயல் உண்மையில் போற்றப்படவேண்டியது.





எழுவான்கரை

அதனை தொடர்ந்து புளியந்தீவில் மதிய உணவை முடித்துக்கொண்டு அடுத்த தொகுதி மாணவர்களை ஒரு தேவாலயத்தில் சந்தித்து விட்டு சரியாக 6.00 மணியளவில் அம்பாறை நோக்கி புறப்பட்டோம்.









திருக்கோவில் அம்பாறை.

திருக்கோவிலில் எமது அம்பாறை இணைப்பாளர் திரு.கலாநேசன் அவர்களின் வீட்டில் இரவு தங்கினோம் . பாரம்பரியமான கிராமம்.அன்பான வரவேற்பு, விருந்தோம்பல். எமது வீட்டில் தங்கியது போன்ற ஒரு உணர்வு.என்ன அங்கும் நுளம்புகள் பேபி அண்ணையை விட்டபாடாகயில்லை.இரவு மட்டக்களப்பு தயிரும் கித்துள் பணியையும் அளவுக்கு அதிகமாகவே சாப்பிட்டு விட்டொம். பின்னர் குளத்து மீன் பொரியலுடன் சாப்பாடு வேறு . நேரம் நடு இரவை தாண்டிய பொழுது எல்லாம் சேர்ந்து பேபி அண்ணையை படுத்திய பாட்டை விடிந்த பின்னர்தான் எம்மால் உணர முடிந்தது. ஒரு கண்டம் தப்பி இருந்தார். காலை 8.00 மணியளவில் எமது இணை இணைப்பாளர் திரு.விவேக் அவர்கள் எமது இருப்பிடத்திற்கே வந்து எம்மை சந்தித்தார்.அவரையும் அழைத்து கொண்டு திருக்கோவில் மகா வித்தியாலயத்திற்கு சென்று அம்பாறையின் முதல்

தொகுதி மாணவர்களை சந்தித்தோம் பின்னர் தம்புலுவில் பாடசாலைக்கு சென்று அதிபருடன் கதைத்து விட்டு  மிகுதி மாணவர்களை சந்திப்பதற்காக பொத்துவில் புறப்பட்டோம் . சரியாக 1.00 மணியளவில் பொத்துவில் மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு .உதயகுமார் அவர்கள் பாடசாலை வாசலில் எம்மை வரவேற்றார்.அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களில் இருந்தும் எமது மாணவர்கள் அங்கெ வந்திருந்தார்கள். அனைத்து மாணவர்களினதும் வாங்கிக்கணக்குகள் சரிபார்க்கப்பட்டு , சில பதிவீடுகள் உடனடியாகவே அருகில் உள்ள வங்கியின் ஊடக செய்துகொடுக்கப்பட்டு ,அவர்களின் நிலைமைகள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டன. அப்போது அந்த மண்டபத்தில் வித்தியாசமானவர்கள் நடமாட்டம் நிலவியது. பிள்ளைகளின் பெற்றோராக இருக்கலாம் என்று அதிபர் நினைத்து விட்டார் போலும் . எல்லாப்பாடசாலைப் பிள்ளைகளும் வந்திருந்ததால் அவரால் அனைவரையும் இனங்காண முடியவில்லை. விளையாட்டுப்போட்டி வேறு மைதானத்தில் நடந்து கொண்டு இருந்தது. எமது சந்திப்புக்களை நிறைவு செய்தவுடன் மாணவர்களை படம் எடுத்து கொண்டு நாம் மனநிறைவுடன் புறப்பட தயாரானோம்.

எமது சாரதி வாகனத்தை பாடசாலையின் உள்ளே நிறுத்தி இருந்ததால் உள்ளிருந்தே சரியாக 4.00 மணியளவில் வாகனத்தில் ஏறி யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டோம்.நாம் புறப்பட்டு 5 நிமிடங்கள் இருக்காது , எமது இணைப்பாளருக்கு அதிபர் திரு.உதயகுமார் அவர்களிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது . பாடசாலைக்கு NIB யினர் வந்திருப்பதாகவும் ,அவர்கள் எங்களை பற்றிய விபரங்களை கேட்பதாகவும் ,வாகன இலக்கத்தை கேட்டதாகவும்  கூறினார். நாங்கள் இப்போது எங்கே நிற்கின்றோம் என்று கேட்பதாகவும் கூறினார்.உடனடியாக எமது இணைப்பாளர் அவர்கள் புறப்பட்டு விட்டார்கள் என்று பதில் அளித்துவிட்டு , எமக்கு விடயத்தை கூறினார். இப்படியான விடயங்களை எதிர்பார்த்திருக்காத படியினால் நாம் சற்று குழம்பித்தான் போய்விட்டொம். அந்த நிலையில் எம்முடன்வந்த எமது இணைப்பாளர் திரு.விவேக்  இப்போது நீங்கள் போவது சரியானது  இல்லை என்றும் தனது வீட்டுக்குவந்து விட்டு செல்லும்படியும் கூறினார். அப்போது அதிபர் மறுபடியும் அழைத்து அவர்கள் பல விடயங்களை கேட்க்கிறார்கள் எனக்கு எதுவும் தெரியாது அவர்களை சந்திக்க வேண்டும் என்று வேறு கேட்க்கிறார்கள் என்றார்.அந்த நிலையில் நாம் ஒரு முடிவுக்கு வந்தோம் , அதிபருடன் தொடர்புகொண்டு எமது தொலைபேசி இலக்கங்களை அவர்களிடம் கொடுக்கும் படியும் , அவர்கள் விரும்பினால் நாளை யாழ்ப்பாணத்தில் எங்களை சந்திக்க முடியும் என்றும் கூறினோம்.

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளும் படியும் கூறினோம். உண்மையில் அவர்கள் தொடர்பு கொண்டால் என்ன செய்வது என்று எமது தெரியாத குழப்பத்திலும் , அங்குள்ள எமது இணைப்பாளர்களுக்கு எதாவது பிரச்சினைகள் வரக்கூடாது என்கின்ற எண்ணத்தினால் அந்த முடிவை எடுத்தோம். இருந்தும் உடனடியாக

புறப்படாமல் திரு.விவேக் அவர்களின் வீட்டில் தங்கி நின்றோம். 1மணி நேரமாகியும் எந்த அழைப்பும் எமக்கு வரவில்லை. பின்னர் அதிபருடன் நாம் தொடர்பு கொண்டோம். அவர்கள் எமது இலக்கங்களை பெற்றுக்கொண்டு சென்று விட்டதாகவும் , நாம் பிரான்சில் இருந்து வந்ததை தெரிந்து வைத்திருந்ததாகவும் கூறினார். நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுடன் அங்கிருந்து 7.00 மணியளவில் புறப்பட்டு. மட்டக்களப்பு , திருகோணமலை , கோரக்கப்பொத்தானை ஊடக வவுனியா வந்து அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலையில் உள்ள பேபி அண்ணையின் வீட்டில் அவரை இறக்கி எமது பயணத்தை இனிதே நிறைவு செய்தோம்.இந்த பயணத்தில் எம்மோடு பயணித்து வாகன ஓட்டுனராக , புகைப்பப்படபிடிப்பாளனாக , எமது பயனாளிகளின் உண்மையான நிலவரத்தகவல்களை சரியாக சந்தேகம்வரத்தபடி அறிந்து ஆவணப்படுத்திய அதிகாரியாக செயற்பட்ட திரு.தினேஷ் அவர்களுடைய பணி பொற்றப்பட வேண்டியதே. அத்தோடு இந்த பயணத்திற்கான தனது சம்பளத்தை பெற மறுத்ததும் இங்கே குறிப்பிடப்பட வேண்டியது அவசியம்.

முக்கியமாக ஆய்வு செய்த விடயங்கள்.

1) வாங்கி புத்தகம்

2) பணம் மீளப்பெற்ற திகதிகள்.

3) பயன்படுத்திய தேவைகள் எழுந்தமானமாக.

4) கற்றல் தொடர்ச்சி .

5) கல்விநிலை முன்னேற்றம் எழுந்தமானமாக

6) ஆசிரியர் ,அதிபர்களின் கருத்துக்கள்

7) எமது இணைப்பாளர்களது கருத்துக்கள்.

8) புதிய தெரிவுகளிற்கான விளக்கம்.

எமது பயண முடிவின் படி நாம் உடனடியாக சில மாணவர்களுக்கான கொடுப்பனவுகளை நிறுத்தியுள்ளோம். அடுத்து பாடசாலை தவிர்ந்த உறுதிப்படுத்தல்களை தவிர்க்குமாறும் , உடனடியாக அந்த மாணவர்களுக்குரிய பாடசாலை அதிபரின் ஊடாக உறுதிப்படுத்தும் படியும் அதனை உடனடியாக செய்து தரும்படியும் அறிவுறுத்தினோம். இதுவரை பணம் பெறுக்கொள்ளாத மாணவர்களுக்கான தீர்வுகளை உடனடியாக வங்கியுடன் கதைத்து சரி செய்தோம். சில நடைமுறை மாற்றங்களை நிர்வாகத்துடன் கதைத்து செய்வதற்கு முன்மொழிவாக்குகின்றோம்.

புதிய மாணவர் தெரிவுகள் அதிபர் ,இணைப்பாளர் , நாட்டுக்கான இணைப்பாளர் , செயலாளர் ஊடாக நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டு நிர்வாகம் முடிவு செய்யவேண்டும் என்பதும் , ஒவ்வொரு மதமும் பணம் வைப்பிலிடப்படுவது உறுதிப்படுத்தவேண்டியது ஒவ்வொரு இணைப்பாளரினதும் கடமையாக்கப்பட வேண்டும் என்பதும் கருத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்மொழிவுகளாகும் . இங்கே விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

நன்றி .

தயாரித்தவர் .

த.தயாபரன் .

செயலாளர் UAETS FRANCE.